## 19. எல்லோரும் சமமே!

ஊருக்குள் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் ஒரே சண்டை.
”யார் பெரியவர்? யார் சிறந்தவர்?” என்பதே சண்டை.
”சக்தியான முட்டை தரும் நானே பெரிது” என்றது கோழி.
”என் பாலைக் குடித்துத் தான் பல குழந்தைகள் உயிருடனே உள்ளன” என்றது பசு.
”என்னை மாதிரி யார் வண்டி இழுக்க முடியும்?” இது குதிரை.
”யார் என்னைப் போல வயலில் ஏர் இழுக்க முடியும்?” இது காளை மாடு.
”என்னையே உணவாகத் தந்து தியாகம் செய்கிறேனே! என்னை விடவா நீங்கள் உயர்ந்தவர்?” என்றது ஆடு.
அப்போது இதைக் கேட்டுக் கொண்டு இருந்த வேப்ப மரம்,
”அடே! ஏன் இப்படி வீணாகச் சண்டை போடுகிறீர்கள்?
தெய்வம் நம்மை மட்டும் அல்ல, உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் பயன் உள்ளதாகவே படைத்து உள்ளது.
மரங்கள் இல்லாமல் நீங்கள் சுவாசிக்க முடியுமா, மழை கிடைக்குமா?
அதோ பாருங்கள்....
குளத்தை சுத்தம் செய்யும் வாத்து
குப்பைக் கிளறி உண்ணும் பன்றி
எலிகளைப் பிடித்து வயல்களைக் காக்கும் பூனை
தோட்டத்தையும் வீட்டையும் காக்கும் நாய்
ஒவ்வொருவரும் சிறந்தவர் தான்!”
என்று எடுத்துக் கூறியதும் அனைத்தும் அமைதியுடன் யோசித்தன.
உண்மையை உணர்ந்து கொண்டன.
எல்லோரும் சமம் தானே?